RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt2131

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

திரு.வி.க.வின் உரைகளில் இலக்கணநயங்கள்

தி. பூங்கோதைப் பிரியா [அ,*]

[அ] தமிழியற்புலம்,மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை- 625021, தமிழ்நாடு, இந்தியா.

Grammatical Policies in the Texts of Thiru.Vi.Ka.

T. Poongothai Priya [a,*]

[a] School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai-625021, Tamil Nadu, India.

* Corresponding Author:
priyamamed@gmail.com

Received : 19-03-2021
Revised : 04-05-2021
Accepted : 07-05-2021
Published : 13-05-2021

ABSTRACT

Attempts to enrich the language, such as composing new texts in the mother tongue, interpreting old texts, and quoting its glories. In this way, literatures in Tamil language are appearing from time to time.Through those discourses, each reveals his unique talents to this world and becomes the escapee of Tamilnadu. He has volunteered for the development of the Tamil language through speeches, writings, works and magazines. Among them, the grammar of Apper Feet's claim that 'my debt is to be done' is Tamilthenral Thiru.Vi.Ka.Literary and grammatical texts also need to be studied in today's context where research is being performed from many different angles in many fields. Among them in Tamil 'Thiru.Vi.Ka.'s prose style' was created by his prose texts and literary texts are numerous.Through them one can know the textual principles of Thiru.Vi.Ka. The purpose of this study is to examine the grammatical principles found in the literary texts written by him, such as Karaikkalammaiyar Thirumurai - Note, Pattinathar Songs - Viruthiyurai, Thirukkural - Lecture.

Keywords: Scale, Surprise word, Question word, Interjection, Adjective

முன்னுரை

திரு.வி.க. அவர்கள் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதை முழுமூச்சாகக் கொண்டவர். தூய தமிழிலேயே பேச வேண்டும், எழுத வேண்டும் என்று வற்புறுத்தியதோடு, அதைத் தன் வாழ்நாள் முழுவதிலும் கடைபிடித்தவர். வெள்ளாடை சூழ்ந்த மெல்லிய உடலும், புலமைப் பொலிவு பெற்ற முகமும் கொண்ட திரு.வி.க. பழந்தமிழ் நூல்களைக் கற்றுத் தேர்ந்தவர். இவர் பள்ளியாசிரியர், பத்திரிக்கை ஆசிரியர், கவிஞர், உரையாசிரியர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், சமூக சீர்த்திருத்தவாதி, தேசபக்தர், தேசத்தொண்டர், பெண் முன்னேற்றத்திற்குக் குரல் கொடுத்தவர் எனப் பன்முகம் கொண்ட வித்தகர் ஆவார்.

இலக்கண நயங்கள்

திரு.வி.க. பாடலில் இடம்பெறும் சொற்களுக்குரிய பொருளுரைப்பது மட்டுமின்றி இலக்கணக் குறிப்பையும் சுட்டிச் செல்கிறார். இதனால் சொற்களுக்குரிய பொருளைப் புரிந்துகொள்வது எளிதாகிறது.

"உரையாசிரியர்கள் மூலநூலில் இடம்பெற்றுள்ள சொல்லையும் தொடரையும் தாம் கூறும் கருத்துக்கு இயையும் இலக்கண நிலையில் வைத்துப் பொருள் காண்பது உரை மரபாகக்

கருதப்படுகின்றது" (Santhanam, 1991) என்னும் கருத்திற்கு இணங்க, திரு.வி.க. தம் உரைவிளக்கத்தில் சொல்லையும் தொடரையும் இலக்கண நோக்கில் வகைப்படுத்தி எடுத்துரைப்பதை அவருடைய ஓர் உரை நயமாகவே கொள்ளலாம்.

"இலக்கியங்களைக் கற்றுணர்ந்து உரையெழுதும் ஆசிரியப் பெருமக்கள் தாம் கருதியவற்றையெல்லாம் நன்கு அழகுபட எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றவராதல் வேண்டும். அவ்வாறு சொல்லுக்கும் தொடருக்கும் - பொதுவாகப் பாடலுக்கு உரைதரும் போது சொற்களின் இலக்கண வரையறை இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. எனவே, ஆங்காங்கே இன்றியமையாத இடங்களில் மட்டும் இலக்கணக் குறிப்பையும் இலக்கண விளக்கத்தையும் உரையாசிரியர்கள் தந்து செல்கின்றனர்" (Mohan & Sokkalingam, 2003) என்று கூறும் அறிஞர் இரா. குமர வேலனின் கூற்றிற்கு ஏற்பத் திரு.வி.க.வின் உரையும் அமைந்துள்ளது. மேலும் திரு.வி.க. உரைப்பொருள் காணும்போது இலக்கண நோக்கு மிக இன்றியமையாததாக அவர் கருதுகின்றமையையும், இலக்கண நெறியின் வழிநின்று பொருள் உரைப்பதனையும் காணமுடிகின்றது. இவ்வாறு திரு.வி.க. இலக்கண நெறியின் வழிநின்று உரை கூறுவதை,

1. இலக்கணக் குறிப்பு தருதல்
2. இலக்கணப் பொருளை விளக்குதல்
3. இலக்கண நூல் சார்ந்த மேற்கோள் காட்டுதல்

என்னும் நிலைகளில் ஆராயலாம்.

இலக்கணக் குறிப்பு தருதல்

உரையின் தேவை கருதி இலக்கணக்குறிப்பு தருவதை உரையாசிரியர்கள் பின்பற்றியுள்ளனர் என்பதை, "பொருள் மயக்கம் ஏற்படாமல் இருக்க, தேர்ந்த பொருள் இதுவென உணர்த்த, உரையாசிரியர்கள் இலக்கணக் குறிப்பைத் தருவதை மரபாகக் கொண்டுள்ளனர்" என்னும் கருத்து விளக்குகிறது (Madhavan, 2010). திரு.வி.க.வும் பழைய உரையாசிரியர்களைப் போன்று தமது உரைகளில் இலக்கணக் குறிப்புகளைத் தந்துள்ளார். சிலவிடங்களில் இலக்கண விளக்கங்களையும் உரைத்துள்ளார். அவ்வாறு திரு.வி.க. காட்டிய இலக்கணக் குறிப்புகள் சிலவற்றைப் பின்வரும் அட்டவணை அட்டவணை -1, அட்டவணை -2, அட்டவணை -3 யில் காணலாம்.

அட்டவணை-1. காரைக்காலம்மையார் திருமுறைக் குறிப்புரையில் திரு.வி.க. தரும் இலக்கணக் குறிப்பு (Kalyanasundharanar, 2003)

வ.எண்	சொல்	இலக்கணக்குறிப்பு.	பக்க எண்
1	ஈசனுக்கே	ஈசனுக்கு - ஈசனை (உருபு மயக்கம்)	ப.27
2	தேறி	தேறு என்னும் பகுயினடியாகப் பிறந்த விகாரப்பட்ட முன்னிலை வினைமுற்று	ப.33
3	கொடு மதி	கோடு - கொடு எனக்குறுகிற்று	ப.67

அட்டவணை-2 பட்டினத்தார் பாடல்கள் விருத்தியுரையில் திரு.வி.க. தரும் இலக்கணக் குறிப்பு (Kalyanasundharanar, 2007)

வ.எண்	சொல்	இலக்கணக்குறிப்பு	பக்க எண்
1	ஓடிய	பெயரெச்சம்	ப.34
2	பாயும்	பெயரெச்சம்	ப.115
3	உயர்	தொழிற்பெயர்	ப.172

4	திரிகண்	வினைத்தொகை	ப.236
5	ஊரீர்	விளி	ப.131

அட்டவணை-3 திருக்குறள் விரிவுரையில் திரு.வி.க. தரும் இலக்கணக் குறிப்பு மற்றும் விளக்கம் (Kalyanasundharanar, 1997)

வ. எண்.	சொல்	இலக்கணக் குறிப்பு	விளக்கம்	பக்க எண்
1	திரு	பல பொருள் ஒரு சொல்	இங்கே இரண்டு பொருள் குறிக்கத் தக்கன, ஒன்று செல்வம், மற்றொன்று அழகு	ப.27
2	திருக்குறள்	திரு என்னும் பொருந்திய அடை	திருவையுடைய குறள் என்று விரிக்க	ப.27
3	குறள்	பண்புப்பெயர்	குறள் - குறுமை	ப.27
4	குறள்	இருமடியாகு பெயர்	குறள், ஈரடி வெண்பாவுக்காம்போது பண்பாகுபெயராய், இவ்வெண்பாக்களால் ஆக்கப்பட்ட நூலைக் குறிக்கும் போது கருவியாகு பெயராய், இருமடியாகு பெயராதல் காண்க.	ப.27
5	வாழ்த்து	படர்க்கை	வாழ்த்து, முன்னிலை - படர்க்கை - வழி நிகழ்வதுண்டு. இங்கே சொல்லப்பட்ட வாழ்த்துப் படர்க்கையின் பாற்பட்டது	ப.41

இவ்வாறு திரு.வி.க. குறிப்புரையில் மிக மிகச் சில இலக்கணக் குறிப்புகளும், விருத்தியுரையில் சில இலக்கணக் குறிப்புகளும் விரிவுரையில் அதிகமான இலக்கணக் குறிப்புகளும் தருகிறார். அவற்றுள் திருக்குறள் விரிவுரையில் மட்டுமே இலக்கணக் குறிப்பின் தன்மையை விளக்குகிறார்.

இலக்கணப் பொருளை விளக்குதல்

இலக்கணக் குறிப்பு கூறும்போது, அவ்விடத்தில் அதன் தன்மையை விளக்குவதாக இம்முறையைக் கையாண்டுள்ளார் திரு.வி.க. இதைத் தேவையான இடங்களில் மட்டுமே விரித்துச் செல்கிறார். இஃது அதன் சிறப்பை உணர்த்துகிறது.

அளபெடை

அளபெடை பற்றி விளக்கும் பகுதிகளில் சில சான்றாகக் காணலாம்.

“கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅ ரெனின்” (குறள்-)

இக்குறளில் தொழாஅர் என்பது அளபெடை என்று குறிப்பிட்டு, அதன் சிறப்பை உணர்த்தும் விதமாக, இசை நிரப்புவது அளபெடை என்று கூறுவோர் கூறுக. இலக்கண வரம்பு எதுவாயினுமாக. இலக்கிய, இலக்கணம் முறையாகப் பயின்ற பின்னர், இயற்கையில் ஒன்றி, அறிவை விடுத்துத் துழவும் பயிற்சியும் பெறுதல் வேண்டும். ஈண்டுப் போந்துள்ள அளபெடை வெறும் இசையை மட்டும் நிரப்பி நிற்பதன்று. அது பொருளும் உடையது” (Kalyanasundharanar, 1997) என்றும், ‘தொழாஅர்’ என்பதிலுள்ள அகர அளபெடையை நோக்குக, அதனுடன்ஒன்றுக, ஒன்றித் திளைக்க எழுத்து மறையும். எழுத்து இயற்கை ஒலியாகும். அங்கே நுண்பொருள் விளங்கும். ‘தொழாஅர்’என்பது இடையறாது தொழுது கொண்டிருத்தலை உணர்த்துவது. தினைப்பொழுதுந் தொழுகையை மறத்தலாகாதென்பது அதன் நுண்பொருள். இக்குறட்பாவில் ‘இடையறாது’ என்னுங் குறிப்பு யாண்டுமில்லை. அஃது

அளபெடையிலேயே மிளர்கிறது" (Kalyanasundharanar, 1997) என்றும் நயமாக எடுத்துரைக்கிறார் திரு.வி.க.

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்

துப்பாய தூஉ மழை" (குறள் - 12)

இக்குறளில் ஆயதூஉம் என்பது அளபெடை. அதை விளக்குமிடத்தில், ஆயதூஉம் என்பதிலுள்ள உகர அளபெடை இசை நிறைக்க வந்ததென்பர். அவ்வளவில் திருவள்ளுவர் ஒலி நின்றுவிடாது. இது பற்றி முன்னரும் என் கருத்தை வெளியிட்டுள்ளேன். திருக்குறளிலுள்ள அளபெடைகள் வெறும் இசை நிறைவுக்கு மட்டும் வருவனவல்ல. அவை பொருளுணர்த்தவும் பொலிந்து நிற்பன. ஈண்டு மழை இரண்டு வழியிலும் பயன்படும் பெற்றி அளபெடையில் ஒளிர்கிறது. அளபெடையை ஒலித்து ஒலித்துப் பார்க்கப் பொருள் விளங்கும்" (Kalyanasundharanar, 1997) என்று குறிப்பிடுகிறார்.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை அதனை

மறத்தலி னூங்கில்லை கேடு" (குறள் -)

இக்குறளில் அளபெடை - ஊஉங்கு பற்றி விளக்கும் போது, "இக்குறட்பாவின் முதலடியில் அளபெடை உண்மையையும், இரண்டாமடியில் அஃதின்மையையும் ஓர்க. அளபெடையில் எழுச்சியும் உயர்ச்சியும் இருத்தலை ஊன்றி ஊன்றிப் பார்க்க. பார்க்கப் பார்க்க அறத்தில் எழுச்சியும், அதன் நிகழ்ச்சியில் உயர்ச்சியும் கிளர்ந்து நிற்றல் (அளபெடையில் திகழ்வது) இனிது விளங்கும். அளபெடை, 'ஊங்கு' என்று எழுதலையும் உயர்தலையும் உணரலாம். அளபெடை, அறத்தில் எழுச்சி வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. அவ்வெழுச்சி ஊங்கி ஆக்கமளித்தலை உணர்த்துகிறது. அளபெடையின்மை, அறத்தை மறந்தால் வளஞ் சுருங்கிக் கேடு விளைத்து இன்மை புகுத்தலைத் தெரிவிப்பது. முதலடியில் அளபெடை அமைத்த அறநெஞ்சம் வாழ்க. உலகம் அறத்தில் நின்று ஆக்கம் பெறுவதாக என்று திரு.வி.க. குறிப்பிடுகிறார் (Kalyanasundharanar, 1997).

"வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்

வாழ்நாள் வழியடைக்கும் கல்" (குறள்)

என்னும் குறளில் படாஅமை - அளபெடையைப் பற்றி விளக்குமிடத்தில், 'வீழ்நாள்', 'வீழ் நாள் படாஅமை' என்னும் இரண்டில் எதைப் பெற மக்கள் முயலல் வேண்டும்? பின்னைய பேற்றைப் பெறவே மக்கள் முயலல் வேண்டும். முன்னையது மேலும்மேலும் உடல் தாங்கலை - பிறவியை-வளர்த்துச் செல்லுந்தகைய தாகலின், பின்னையதைப் பெற முயல்வது அறிவுக்கழகு. இது பற்றியே, ஆசிரியர் 'வீழ்நாள் படா அமை' என்றார். 'படாஅமை' என்பதிலுள்ள அளபெடையை நோக்குக, அதனிடை ஒன்றி உறைந்து பார்க்க, 'வீழ்நாள் உண்டாகாமல் வாழ்க வாழ்க' என்று ஒலித்தல் காண்க. அளபெடை வீழ்நாள் படாமல் வாழுமாறு வலியுறுத்துவது" என்று குறிப்பிடுகின்றார் (Kalyanasundharanar, 1997).

இடைச்சொல்

திரு.வி.க., கொல், மன், நின்று என்னும் இடைச் சொற்களுக்குப் பொருள் கூறுகிறார். பிற உரையாசிரியர்கள் அசையாகக் கொள்வதை மறுக்கிறார். சான்றாக,

'கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்

நற்றாள் தொழாஅ ரெனின்' (குறள்)

இக்குறளில் கொல் என்னும் இடைச்சொல் பற்றி விளக்குமிடத்தில்,

"திருக்குறள் நூலில் வெற்றுச் சொல் காண்டல் அரிது என்பதற்குக் காரணம் இப்பாட்டின் விருத்தியில் மேலே சொல்லப்பட்டது. 'கொல்' பெரிதும் வினாக் குறிப்பைத் தொடர்ந்து வருவது இயல்பு. இதுபற்றியே 'என்கொல்' என்பதற்கு என்னை என்று மட்டும் பொருள் கூறாது, என்னையோ

என்று பொருள் கூறப்பட்டது. ஆகவே, 'கொல்'லும் ஈண்டுப் பொருளுடையதென்க." (Kalyanasundharanar, 1997) என்று குறிப்பிடுகின்றார்.

'மகன்தந்தைக் காற்று முதவி 'இவன்தந்தை

என்னோற்றான் கொல்'லெனுஞ் சொல்' (குறள் - 68)

இக்குறளில், "கொல்: வியப்பிடைச்சொல் என்ப, ஐயவிடைச் சொல் என்ப - இரண்டும் விரவிய சொல் என்ப. 'கற்றதனா லாய....' என்னும் பாட்டுக்குறிப்பைப் பார்க்க" (Kalyanasundharanar, 1997) என்று குறிப்பிடுவதனால், இடைச்சொல்லை அசையாகக் கொள்ளக் கூடாது எனும் கருத்தை வலியுறுத்துகிறார் எனலாம்.

இவ்வாறு இலக்கணக் குறிப்பின் சிறப்பை உணர்த்தவும், பிற உரை ஆசிரியர் கொண்ட இலக்கணக் குறிப்பை மறுத்துக் கூறவும் 'இலக்கணப் பொருளை விளக்குதல்' என்னும் நிலையைக் கையாளுகிறார் திரு.வி.க.

இலக்கண நூல் சார்ந்த மேற்கோள் காட்டுதல்

திரு.வி.க. தம் உரைகளில் 'மேற்கோள் காட்டுதலை' அவர்தம் உரைச் சிறப்பியல்பாகக் கொள்ளலாம். 'மேற்கோள் காட்டுதல்' எனும் இயல்பை அவர்தம் உரையின் சொற்கள், பொருள், கருத்தை உறுதிபடுத்துவதற்காக ஒப்பீடு செய்யும் நிலையில் கையாண்டுள்ளார். ஈண்டும் அதே நிலையில் கையாளுகிறார். திரு.வி.க.வின் இலக்கண நூற்புலமையைக் காட்டும் விதமாக, இங்கு அவர் கையாண்ட இலக்கண நூற்பா, உரை மேற்கோள்கள் மட்டும் எடுத்துக்காட்டப்படுகின்றன. திரு.வி.க. திருக்குறள் விரிவுரையில், தொல்காப்பியம் நன்னூல், பிரயோக விவேகம், தொல்காப்பிய உரை நூல்களான நச்சினார்க்கினியம், பேராசிரியம், சேனாவரையர் உரை போன்ற நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். பட்டினத்தார் விருத்தியுரையில் தொல்காப்பியம் மற்றும் அதன் உரைகளில் நச்சினார்க்கினியர், சேனாவரையர் உரைகள் மட்டுமே மேற்கோள் காட்டப்படுகின்றன. காரைக்காலம்மையார் திருமுறைக் குறிப்புரையில் இலக்கண நூல் மேற்கோள்கள் இடம்பெறவில்லை, பிங்கலந்தை எனும் நிகண்டு மட்டும் மேற்கோள் காட்டப்படுகிறது. சான்றாக, கடவுள் வாழ்த்து பகுதியில், மனிதப் பிறவி பற்றி விளக்குமிடத்தில், "மனிதப் பிறவி தாங்கினோர் அனைவரும் மனிதராகார். மனிதரிலுங் கல்லுண்டு, புல்லுண்டு, மரமுண்டு, புழுவுண்டு, பாம்புண்டு, புள்ளுண்டு, விலங்குண்டு, பிற உண்டு. மனிதரில் மனிதராக முயல்வதே சிறப்பு. இது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார் மனிதப் பிறவி தாங்கினோரை ஈரினமாகப் பிரித்தனர். அவை மக்களினம் மாக்களினம் என்பன. அவர், 'மாவு மாக்களும் ஐயறிவினவே', 'மக்கள் தாமே ஆறறிவுயிரே' என்று கூறியது காண்க'" என்று தன் கருத்தை வலியுறுத்தப் தொல்காப்பிய நூற்பாவை மேற்கோள் காட்டுகிறார் (Kalyanasundharanar, 1997).

நீத்தார் பெருமை அதிகாரத்தில், பனுவல் எனும் சொல்லுக்குப் பொருள் கூறுமிடங்களில், "பனுவல் - சொல் (பனுவுதல் - சொல்லுதல்), 'மெய்யறி பனுவலின்'-தொல்காப்பியம்: சொல், 96, சொல்லால் ஆக்கப்படுவது நூல் (சாஸ்திரம்)" என்றும் "பஞ்சால் ஒழுங்காகச் செய்யப்படுவது நூல் (Kalyanasundharanar, 1997). இப்பெயரே ஒழுங்காகச் சொல்லால் செய்யப்படுவதற்கும் வழங்கப்படுகிறது. 'பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச் செஞ்சொற் புலவனே சேயிழையா - எஞ்சாத, கையேவா யாகக் கதிரே மதியாக, மையிலா நூன்முடியுமாறு' நன்னூல்" என்றும் குறிப்பிடுகிறார் (Kalyanasundharanar, 1997). திரு.வி.க. 'நிறைமொழி மாந்தர் பெருமை' எனும் தொடரை விளக்கும் போது, "நிறைமொழி மாந்த ரென்பது சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டுங் குறைவின்றிப் பயக்கச் சொல்லும் ஆற்றலுடையார் என்றவாறு (இது பேராசிரியம் - தொல்காப்பியம்: பொருள் உரை: 490)" என்று திரு.வி.க. குறிப்பிடுகிறார் (Kalyanasundharanar, 1997).

முடிவுரை

திரு.வி.க. தம் உரையில் இலக்கண நூல் சார்ந்த மேற்கோள்கள் பயன்படுத்திய இடங்கள் பல உள்ளன. இவற்றின் மூலம் திரு.வி.க. ஆழ்ந்த இலக்கணப் புலமை கொண்டவர் என்பதை அறியலாம். இவ்வாறு திரு.வி.க. தம் உரைகளில் இலக்கணக் குறிப்பு தருதல், இலக்கணப் பொருள் விளக்குதல், இலக்கண நூல் சார்ந்த மேற்கோள்களைக் கையாளுதல் எனும் நிலைகளில், அவர்தம் உரை மரபின் இலக்கண நயங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

References

Kalyanasundharanar, Thiru. Vi., (Commentator), (2003) Karaikalammaiyar Thirumurai (ArumbathaKurippurai), (1st Edition) Mullai NilIyam, Chennai, India.

Kalyanasundharanar, Thiru. Vi., (Commentator), (2007) Pattinaththaarpadalkal – Viruththiurai, (3rd Edition) Palaniyappa brothers, Chennai, India.

Kalyanasundharanar, Thiru. Vi., (Commentator), (1997) Thirukkural Virivurai, (1st Edition) Poombugar Pathippakam, chennai, India.

Madhavan, V.R., (Pub), (2010) Thiranaaivu Nokkil Vengadasamy Naattar, (Naattarin Uraimaanbu – Essay), (1st Edition) Tamil University, Tanjore, India.

Mohan, R., Sokkalingam, N., (2003) Urai Marabugal, (1st Edition) Meiyappan Pathippakam, Chithamparam – 01, India

Santhanam, M., (1991) Peraasiriyar Uraiththiran, (1st Edition) Kallambal Pathippakam, Madurai, India.

Funding: NIL
Acknowledgement: NIL
Conflict of Interest: NIL
About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License